# கூட்டு வழிபாட்டிற்கான திருமுறைப் பாடல்கள்



வெளியீடு
ஆத்மஜோதி
தியான மணி மண்டபம்
ஏழாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# கூட்டு வழிபாட்டிற்கான திருமுறைப் பாடல்கள்

தொகுத்தவர் :

சிவத்திரு சிவசண்முகவடிவேல்

அவர்கள்

வெளியிட்டவர் :

நா.முருகையா

ஆத்மஜோதி தியான மணிமண்டபம்

ஏழாலை.

2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஆலயங்களிலும், தனி இடங்களிலும் ஏனைய சைவ சமய நிகழ்ச்சியிலும் பிரார்த்திக்கவும், இறைவன் புகழ் பாடவும், உகந்த கூட்டு வழிபாட்டிற்குரிய திருமுறைப் பாடல்களை சைவ உலகம் பெற்றுப் பயன்பெறுவதாக.

வாழ்க சிவநாமம்
வளர்க சைவம்

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்,
3-11-2004

சிவசண்முகவடிவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டு வழிபாட்டிற்கான திருமுறைப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

1. அங்கமும் வேதமு மோதுநாவர்
அந்தணர் நாளு டிபரவ
மங்குன்ம திதவழ் மாடவீதி
மருகனி லாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங்கு டியதனுள்
கங்குல்வி ளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே.

2. வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு
வேணுபுர மதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. உண்ணாமுலை யுமையாளொடு
முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரள்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே.

4. நாளாய போகாமே
நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்பு செய்வோ
மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளை கிளைக்குங்
கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமாவன்
கோளிலியெம் பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. வேத மோதி வெண்ணூல் பூண்டு
வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார்
புலியி னுரிதோலார்
நாதா வெனவு நக்கா வெனவு
நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார்
பழன நகராரே.

6. நன்றுடையானைத் தீயதிலானை
நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக
முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்
சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளம்
குளிரும்மே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கள்ளார்ந்த பூங்கொன்றை
மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடிஎம்
பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி
சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம்
புள்ளிருக்கு வேளூரே.

8. கீதத்தை மிகப்பாடும்
அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற
பரஞ்சோதி பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால்
வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான்
புள்ளிருக்கு வேளூரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. மந்திர மாவது நீறு
வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு
துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு
சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன்
திருவால வாயான் திருநீறே

10. முத்தி தருவது நீறு
முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு
தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு
பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு
திருவால வாயான் திருநீறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பலர் வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

12. சலம்பூ வொடுதூ பமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கிலுமுன் னைமறந் தறியேன்
உன்னாம மென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுசூ லைதவிர்த் தருளாய்
அலந்தேன் அடியே னதிகைக் கெடில
வீரட் டானத் துறையம் மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்.
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

14. வளர்மதிக் கண்ணியி னானை
வார்குழ லாளொடும் பாடிக்
களவு படாததோர் காலங்
காண்பான் கடைக்கணிக் கின்றேன்
அளவு படாததொ ரன்போ
டையா றடைக்கின்ற போது
இளமண நாகு தழுவி
ஏறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. கரவாடும் வன்னெஞ்சர்க்
கரியானைக் கரவார்பால்
விடுவாடும் பெருமானை
விடையேறும் வித்தகனை
அரவாடச் சடை தாழ
அங்கையினில் அனலேந்தி
இரவாடும் பெருமானை
என்மனத்தே வைத்தேனே.

16. கைப்போது மலர்தூவிக்
காதலித்து வானோர்கள்
முப்போதும் முடிசாய்த்துத்
தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி
ஐம்புலனும் அகத்தடக்கி
எப்போதும் இனியானை
என்மனத்தே வைத்தேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. வடிவேறு திரிசூலந் தோன்றுந் தோன்றும்
வளர்சடைமே லிளமதியந் தோன்றுந்
- தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக் கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு கலந்து
- தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப் போர்வை தோன்றும்
எழில்திகழுந் திருமுடியு மிலங்கித்
- தோன்றும்
பொடியேறு திருமேனி பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம் புனித
- னார்க்கே.

18. தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலுவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
எத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாது ஐயுற வில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே.

20. பத்திமையும் அடிமையையும்
கைவிடுவான் பாவியேன்
பொத்தினநோய் யதுவிதனைப்
பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்
முத்தினைமா மணிதன்னை
வயிரத்தை மூர்க்கனேன்
எத்தனைநாட் பிரிந்திருக்கேன்
என்ஆரூர் இறைவனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. மருவார் கொன்றை மதிசூடி
மாணிக் கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு
மகிழ்ந்து பூதப் படைசூழத்
திருமால் பிரமன் இந்திரற்கும்
தேவர் நாகர் தானவர்க்கும்
பெருமாள் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.

2. கொத்தார் கொன்றை மதிசூடிக்
கோள்நா கங்கள் பூணாக
மத்த யானை உரிபோர்த்து
மருப்பும் ஆமைத் தாலியார்
பத்தி செய்து பாரிடங்கள்
பாடி ஆடப் பலிகொள்ளும்
பித்தர் கடவூர் மயானத்துப்
பெரிய பெருமா னடிகளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. நத்தார்படை ஞானன்பசு
ஏறிந்றனை கவிழ்வாய்
மத்தம்மத யானைஉரி
போர்த்தம ணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழு
பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான் திருக்
கேதீச்சரத் தானே.

24. அங்கத்துறு நோய்கள்ளடி
யார்மேல்ஒழித் தருளி
வங்கம்மலி கின்றகடல்
மாதோட்டநன் னகரில்
பங்கஞ்செய்த மடவாளொடு
பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்ததிருக்
கேதீச்சரத் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. பூசுவதும் வெண்ணீறு
பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான்
மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும்
பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழலோ.

26. இந்திரிய வயமயங்கி
யிறப்பதற்கே காரணமா
யந்தரமே திரிந்துபோ
யருநரகில் வீழ்வேனைச்
சிந்தைதனைத் தெளிவித்துச்
சிவமாக்கி யெனையாண்ட
வந்தமிலா வானந்த
மணிகொள்தில்லை கண்டேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. முத்திநெறி யறியாத
    மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி யறிவித்துப்
    பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமல மறுவித்துச்
    சிவமாக்கி யெனையாண்ட
வத்தனெனக் கருளியா
    றார்பெறுவா ரச்சோவே.

28. நெறியல்லா நெறிதன்னை
    நெறியாக நினைவேனைச்
சிறுநெறிகள் சேராமே
    திருவருளே சேரும்வண்ணம்
குறியொன்று மில்லாத
    கூத்தன்றன் கூத்தையெனக்
கறியும்வண்ணம் அருளியவா
    றார்பெறுவா ரச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

29. கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர்மன மணிவி ளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

## திருப்பல்லாண்டு

30. ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை யாதிரைநாள்
நாரா யணனொடு நான்முக னங்கி
இரவியு மிந்திரனுந்
தேரார் வீதியிற் தேவர் குழாங்கள்
திசையனைத் துநிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியு மாடியும்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

32. சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

33. அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.

35. நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே

## திருப்புராணம்

36. உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணிய
னலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

37. என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கு நிலவி யுலகெலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

38. காரண மதாகவந்து புவிமீதே
காலனணு காதிசைந்து கதிகாண
நாரணனும் வேதன்முன்பு தெரியாத
ஞானநட மேபுரிந்து வருவாயே
ஆரமுத மானதந்தி மணவாளா
ஆறுமுக மாறிரண்டு விழியோனே
சூரர் கிளைமாளவென்ற கதிர்வேலா
சோலைமலை மேவிநின்ற பெருமாளே.

## வாழ்த்து

39. வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுவை வளர்ப்போம்



பசு வதையைத் தடுப்போம்

பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org